சொன்னேன். நேற்றே அவற்றைப் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இன்று அவை கூடுவதால் பத்திரிகையில் வெளியிடுவதைவிட—இந்தப் பேரவைக்கு மதிப்புத் தந்து, இந்தப் பேரவையில் வெளியிடுவதே சிறப்பாக இருக்கும் என்று கருதி—நேற்று தயாரித்த அறிக்கையை பத்திரிகையில் வெளியிடாது நான் இன்று இந்தப் பேரவையில் வெளியிட்டேன். நான் வெளியிடப்போகிற அறிக்கையைப் பார்த்த பின் தாங்கள் ஒரு முடிவு எடுக்கப் போவதாக மாணவர்கள் சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு வேலைநிறுத்தம் இருக்கக்கூடும். ஆனால் எந்த விதமான தகவலும் இதுவரை வரவில்லை. இன்று இந்தப் பேரவையில் நான் 82-வது விதியின்படி வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்த பின்னர் அவர்கள் நாளை வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு தங்கள் தங்கள் கல்லூரிகளுக்குச் செல்வார்கள் என்று நினைக்கிறேன். செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதற்கு உறுதுணை யாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது விதியின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

6. கவன ஈர்ப்பு.

சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டப்பகுதியில் பாசன வசதித் திட்டம்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், சாத்தனூர் அணைக்கட்டு ஆயக்கட்டில் சம்பந்தப்பட்ட அயன் நஞ்சை நிலங்கள் (ஏரிகளின் கீழுள்ள) எப்பொழுதும் ஈரம் உலராமல் எந்தப் பயிரும் செய்வதற்கு லாயக்கற்ற கோரைகள் முளைத்துள்ளன. இப்படிப்பட்ட நஷ்டங்களைப் போக்கவும் பயிர்கள் நல்ல நிலைமைக்கு வருவதற்கும் வடிகால் வசதிகள் செய்து கொடுக்க ஒரு ஸ்கீம் தயாரிக்கப்பட்டு

1969 செப்டம்பர் 11] [திரு. கே. சகாதேவக் கண்டர்]

சர்க்கார் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அங்கீகாரம் அளிக்கவும் போதிய நிதியை ஒதுக்கவும் 1969 டிசம்பர் 30 தேதிக்குள் வேலையை முடிக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மை அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சாத்தனூர் நீர்த்தேக்க திட்டப்பகுதியில் பாசன நீர் நிர்வாக, வடிகால் முதலிய பாசனத்திற்கான திட்டம் ஒன்றிற்கு வேளாண்மைத்துறை 11—8—1969 தேதியிட்ட 2511 எண் ஆணையில் அரசு ஒப்புதல் வழங்கியது. நிலத்தைச் சரிவர சமன்படுத்துதல், பயிர் செய்வதற்கு ஏற்றதாக்குதல் விழிப்புடன் நீர் நிர்வாகம் பேணுதல் சரியான வேளாண்மை முறைகள் மண்வள மேன்பாடு, மண்வள ஆய்வு, மண்வளச் சோதனை, தகுந்த பாசன முறைகள், உவர் நிலம் களர் நிலமும் முதலிய வற்றைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான சரியான வேளாண்மை முறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் சமன்படுத்தப் பட்ட 100 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதியும், வடிகால், போத்திகளைக் கொண்ட 100 ஏக்கர் ஆயக்கட்டும் அடங்கும்.

2. கீழ்க்காணும் பணியாளர்களை 1—10—1969-லிருந்து 28—2—1970 வரையில் வேலைக்கமர்த்த அரசு அனுமதி அளித்துள்ளது.—

1.	வேளாண்மை உதவிப் பொறியாளர்	1
2.	துணை உதவியாளர்கள்	2
3.	களப்பணியாளர்	2
4.	உதவியாளர்	1
5.	இளநிலை உதவியாளர்	1
6.	வரைபட வரைவாளர் நிலை 2.	1
7.	வரைபட நகல் எடுப்பவர்	1
8.	ஜீப் வலவர்	1
9.	தட்டச்சர்	1
10.	கடைநிலைப்பணியாளர்	1

1969-70-ம் ஆண்டில் (தொடரின) சில்லரைச் செலவிற்காக ரூ. 5,100 அரசு அனுமதி வழங்கியது.

தொடர்வண்டியுடன் கூடிய ஜீப், கணித நில அளவைக் கருவிகள், தட்டச்சுப்பொறி, மேஜை, நாற்காலி ஆகியவை வாங்க தொடராச் செலவாக ரூ. 28,000-மும் 100 ஏக்கர் நிலத்தைச் சமன்

படுத்துவதற்கும், 100 ஏக்கர் நிலத்தில் வடிகால் போத்திகளை அமைப்பதற்காக ரூ. 54,000-மும் செலவு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து 15 சதவீத மான்யமும் 60 சதவீதக் கடன் உதவியுடன் கிடைக்கும். இத்திட்டத்தின் மூலமாகப் பயனடைவோருக்கும் மாநில அரசு 10 சதவீத உதவித்தொகை வழங்குகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிக்காகும் செலவு பயன்துய்ப்போரிடமிருந்து மூன்றாவது ஆண்டு தொடங்கி 10 சமமான ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படும். பயனடைவோரிடமிருந்து வசூலாகும் தொகை மத்திய மாநில அரசு வழங்கிய உதவித் தொகைபோக இத்திட்டத் திற்காகும் செலவையே குறிக்கிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாத்தனூர் ஆயக்கட்டு பகுதியில் ரூ. 14,20,000 மொத்தச் செலவில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படும் :—

	முதலாண்டு ஏக்கரில்.	இரண்டாவது ஆண்டு ஏக்கரில்.	மூன்றாவது ஆண்டு ஏக்கரில்.	நான்காவது ஆண்டு ஏக்கரில்.	ஐந்தாவது ஆண்டு ஏக்கரில்.	மொத்தம்.
1 நிலத்தைச் சமப படுத்துதல்.	100	750	750	750	650	3,000
2 வடிகால்கள் ..	100	2,500	2,500	2,500	1,400	9,000
3 உவர் நிலையம், களர் நிலங் களைப் பண் படுத்தல்.	..	150	150	200	200	700

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. மெய்யப்பன், திரு. கருப்பையா ஆகியவர்கள் அவையில் இல்லாத காரணத்தினால் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) விதி 23(1)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டப் பேரவை விதிகளின் 23(1)-வது விதியைத் தளர்த்திவிட்டு இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக்கொள்ளவேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.